GANDHI TATTA KATAI BIRL

காந்தித் தாத்தா கதை

முதியவர் கல்வி முன்னேற்றத்திற்காகவும்
பாலர்கட்குப் பயன்படுமாறும் வெளியிடப்பட்டது

by

CONNEMARA PUBLIC LIBRARY
8-NOV 1949
MADRAS

KAVERI VENKATRAMAN & VENKATRAMAN (SR)

ஸ்ரீமதி காவேரி வெங்கட்ராமன்
ஸ்ரீ எஸ். ஆர். வெங்கட்ராமன்

சக்தி காரியாலயம்
ஜார்ஜ் டவுன், சென்னை

[உரிமை பதிப்புற்றது]

1941

பொருள் அடக்கம்

8-NOV 1949
MADRAS

குழந்தைப் பருவம்	1
ஒழுக்கம் திருந்துதல்	8
பாரிஸ்டர் படிப்பு	12
வக்கீல் தொழில்	17
தென்னுப்பிரிக்க சேவை	22
ஆசிரம வாழ்க்கை	27
தென்னுப்பிரிக்க சத்யாக்ரகம்	31
சபர்மதி ஆசிரமம்	37
காந்தியும் சாரணர்களும்	44
காந்தியும் அவரது உணவும்	46
அரசியல் தொண்டு	48
குணதிசயம்	51

ட

சித்திரக் குறிப்பு

எண்		பக்கம்
1.	காந்தித் தாத்தா (4 வர்ணம்)	முகப்பு
2.	காந்திஜீ கத்தியவார் ஸ்கூலுக்குப் போகும்போது	3
3.	பவநகர் காலேஜில் வாசிக்கும்போது	6
4.	காந்திஜீயின் தமிழ்க் கையெழுத்து	7
5.	காந்திஜீயின் தகப்பனர்	9
6.	பிரமிக்கச் செய்யும்படியான இங்கிலீஷ் உடையில் காந்திஜீ	14
7.	பாரிஸ்டர் உடையில்	18
8.	,, இந்தியக் குல்லாயுடன்	19
9.	அடர்னி (Group)	22
10.	செஞ்சிலுவை உடையுடன்	25
11.	கோபால கிருஷ்ண கோகலே	26
12.	இந்திய உடையில், இந்தியத் தலைப்பாகையுடன்	32
13.	வள்ளியம்மை முதலிய தமிழ்ப் பெண்மணிகள்	34
14.	டாக்டர் நாயுடு தம்பதிகளுடன் (Inset)	36
15.	இந்தியாவுக்குத் திரும்பல் (1915)	37
16.	வங்கக் கவி ரவீந்திரரும் காந்திஜீயும்	38
17.	நூல் நூற்றல்	42
18.	சாரணர் கொடியேற்று விழா	44
19.	நோய் வாய்ப்பட்டு ஆபரேஷன் செய்து கொள்ளுதல்	46
20.	காந்தித் தாத்தாவின் மனைவியார்—அன்னை கஸ்தூரி பாய் (Inset)	48
21.	வட்டமேஜை மகாநாட்டில் காந்தி	50
22.	ஏழைகளின் துணைவரான காந்தித் தாத்தா	51
23.	காந்தித் தாத்தாவும் குழந்தையும்	54
24.	காந்தித் தாத்தாவும் அவர் தற்போது வசிக்கும் குடிசையும்	55

முதற் பதிப்பு : விக்கிரம, பங்குனி

சகல உரிமைகளும்
சக்தி காரியாலயத்தாருக்கே

சக்தி பிரஸ் லிமிடெட் (சாந்தி பிரஸ்), ஜி.டி., சென்னை

காந்தித் தாத்தா கதை

குழந்தைப் பருவம்

மஹாத்மா காந்தி யென்றால், குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை, எல்லாரும் அறிவார்கள். அவருடைய பெயரும் புகழும் பரவாத நாடோ, தேசமோ இவ்வுலகத்தில் இல்லை. பட்டிக்காட்டுக் குடியானவனைப் போல் முழங்காலுக்குமேல் துணி, திறந்த மார்பு, கையில் ஒரு கொம்பு, பிரகாசமான கண்கள், சாந்தமான முகம், ஒல்லியான தேகம், சுறுசுறுப்பான நடை, கலகல வென்ற சிரிப்பு, இனிமையான வார்த்தை—இந்த லட்சணங் களுடைய எழுபது வயது நிறைந்த கிழவர் மஹாத்மா காந்தி. அவர் ஒரு அவதார புருஷர். அவரை நேரில் பார்க்கும் யாவரும் அதிகப் புண்ணியம் செய்தவர்கள் என்றே சொல்லவேண்டும்.

இவருடைய முழுப் பெயர், மோகனதாஸ் கரம்சந்த் காந்தி. 1869-ஆம் வருஷத்தில் அக்டோபர் மாதம் 2-ஆந் தேதி கத்தியவார் பிரதேசத்தில் போர்பந்தர் என்ற ஊரில் காந்தி பிறந்தார். இவருடைய தகப்பனாரான காபா காந்தி என்பவர் ராஜகோட் சமஸ்தானத்தில் திவானாக இருந்தார். குடிகளின் நன்மைக்காக, காபா காந்தி இராப் பகலாய் வேலையை நெறி தவறாமல் செய்துவந்தார் ; தமது வேலைத்

திறத்தினுல் எல்லாருடைய அன்பையும் நன்மதிப்பையும் பெற்ருர். மேலும், ராஜகோட் சமஸ்தானதிபதியிடம் அவருக்கு அளவற்ற விசுவாசமூம் பக்தியுமுண்டு.

மஹாத்மா காந்தியின் தாயாரோ சீலம் மிகுந்த பெண் மணி. அவருக்குக் கடவுளிடம் அளவற்ற நம்பிக்கை யுண்டு. ஒவ்வொரு நாளும் தப்பாமல் அந்த அம்மணி கோவிலுக் குச் செல்வார் ; அங்கே கடவுளுக்குப் பூஜை விமரிசையாய் நடத்துவார் ; கோயிலில் நிகழும் மதவிஷயமான கதா காலட்சேபங்களையும், உபந்யாசங்களையுங் கேட்டுப் பரவச மடைவார். தாம் மேற்கொண்ட நோன்புகளையும், விரதங் களையும் வெகு பக்தி சிரத்தையாக வைராக்யத்துடன் நிறை வேற்றுவார் ; பல விரத தினங்களில் நாள் முழுதும் பட் டினி கிடப்பார் ; நோய் வாய்ப்பட்டுக் கஷ்டப்பட்டாலும், பட்டினி கிடந்து தம் உபவாசத்தை நிறைவேற்றுவார். சூரியனைக் கண்ட பிறகுதான் சாப்பிடுவது என்ற விர தத்தையும் அவர் அடிக்கடி எடுத்துக் கொள்வார். மாரி காலத்தில் ஆகாயம் மேகம் நிறைந்து மப்பும் மந்தாரமுமா யிருக்கும்போது, தொடர்ந்து பல நாள் சூரியன் கண் ணுக்குத் தோன்ருமலே யிருந்துவிடும். இருந்தபோதிலும், காந்தியின் தாயார், எவ்வளவு நாளானுலும் பட்டினி கிடப்பார் ; தம் விரதத்திற்குப் பங்கம் விளைக்காமல் சூரி யனைப் பார்த்த பிறகே உணவு கொள்வார்.

காந்திக்கு வயது ஏழு நிரம்பியதும் அவரைப் படிக்க வைத்தார்கள். அவருக்குக் கூச்சமும் நாணமும் அதிகமா யிருந்தமையால், தம் வயதுப் பையன்களோடு அவர் சேர விரும்பவில்லை. பள்ளிக்கூடம் திறக்கும் சமயத்திற்குப் போவார் ; பள்ளிக்கூடம் கலைந்ததும் நேராக வீட்டுக்கு வருவார். உண்மையே பேசுவார். பெரியவர்களுக்குக்

கீழ்ப்படிந்து நடப்பார். தம் குலதர்மத்துக்கு விரோத மாக நீதி தவறி நடக்கமாட்டார்.

அவர் பள்ளிக்கூடத்துப் பாடங்களைத் தினந்தோறும் தவருமல் கவனமாய்ப் படிப்பார். ஒரு சமயம் தகப்பனுரின் அனுமதி பெற்று இரண்டு நாடகங்களைப் பார்க்கச் சென்ருர். அவற்றுள், சிரவண குமார் என்பது ஒன்று; மற்ருென்று அரிச்சந்திர நாடகம்.

இவ்விரண்டு நாடகங்களையும் பார்த்த காந்தியின் மனம் ஒரு புதிய உணர்ச்சியை யடைந்தது. அந்த நாடகங்களின் நீதி இவர் மனத்தில் பசுமரத்தாணிபோல் பதிந்தது.

சிரவண குமாரின் கதை, ராமாயணம் படித்த எல்லாருக்கும் நன்ருகத் தெரியும். சிரவண குமாருடைய தாயும் தந்தையும் வயோதிகத்தினுல் கண்ணை யிழந்தார்கள். உயிர் விடுவதன் முன்பு, எல்லாப் புண்ணிய தீர்த்தங்களிலும் நீராடி, எல்லா க்ஷேத்திரங்களிலும் சுவாமி தரிசனம் செய்யவேண்டுமென்று அவர்களிருவரும் ஆசைப் பட்டார்கள். ஆனுல், அவர்களிடம் ஒரு பைசாக்கூடக் கிடையாது. அவர்கள் பரம ஏழைகள். சிரவண குமார் தன் பெற்

ரோரிடம் அதிக அன்புள்ளவன்; தேக பலமும், மனோ திடமும் பெற்றவன். தன் தாயை ஒரு கூடையிலும், தன் தந்தையை மற்றொரு கூடையிலும் உட்காரச் செய்தான்; பிறகு அந்தக் கூடைகளை ஒரு மூங்கிலின் இரண்டு நுனிகளிலும் கட்டித் தொங்கவிட்டான். அந்த மூங்கிலைக் காவடி தூக்குவது போல் தன் தோளில் தூக்கிக்கொண்டு, புண்ணிய தீர்த்தங்களுக்கும் க்ஷேத்திரங்களுக்கும் சென்று, தன் பெற்றோர்களின் ஆசையை நிறைவேற்றிவந்தான்.

இப்படி யாத்திரை செய்து வரும்போது, ஒருநாள் சிரவண குமார் தன் பெற்றோர்களின் தாகத்துக்கு நீர் கொண்டுவர ஓர் ஓடைக்குச் சென்றான். அதே சமயத்தில், தசரத மஹாராஜா அங்கே வேட்டையாட வந்திருந்தார். சிரவண குமார் ஒரு சிறு கூஜாவில் தண்ணீர் மொள்ளவே, அதனால் ஒரு மிருகம் தண்ணீர் குடிப்பது போன்ற சத்தம் உண்டாயிற்று. வேட்டையாட வந்த தசரத மஹாராஜா, இதைக் கேட்டு, ஏதோ துஷ்ட மிருகம் தண்ணீர் குடிக்கிறதென்று எண்ணினார். உடனே, எந்த இடத்திலிருந்து சத்தம் வந்ததோ அந்த இடத்தை நோக்கித் தசரதர் ஓர் அம்பு விடுத்தார். அந்த அம்பு சிரவண குமாரின் மார்பில் பாயவே, அவன் ‘ஐயோ !’ என்று அலறிக்கொண்டு கீழே சாய்ந்தான். அம்பு பாய்ந்த இடத்திலிருந்து ஒரு மனிதனுடைய குரலோசை வந்ததைக் கேட்ட தசரத மஹாராஜா திடுக்கிட்டுப் போனார்; உடனே அந்த இடத்துக்கு ஓடினார்; மார்பில் அம்பு தைத்த சிரவண குமாரைப் பார்த்தார். தாம் அறியாமையால் செய்த பாதகத்துக்குத் தம்மையே நொந்தார். தம்மை மன்னிக்கும்படி சிரவண குமாரிடம் மன்றாடினார். அம்பு பாய்ந்த வேகத்தால், சிரவண குமாரின் மார்பிலிருந்து ரத்தவெள்ளம்

பெருகிக்கொண்டிருந்தது. அவனுடைய உயிர் போய்க் கொண்டிருந்தது. அதோடு சிரவண குமார் அரசனை நோக்கினன்; அரசன் தெரியாமல் செய்த செய்கைக்கு அவரை மன்னித்தான். என்றாலும், தாகத்தினால் தவித்துக் கொண்டிருக்கும் தன் பெற்றோர்களின் ஞாபகம் சிரவண குமாருக்கு வந்தது. ஆகவே, தசரத மஹாராஜாவை நோக்கித் தன் பெற்றோர்களுக்குத் தண்ணீர் கொண்டு போய்க் கொடுக்கும்படி வேண்டிக்கொண்டான். அரசனும் அவ்விதமே செய்தான்.

இந்த நாடகம் காந்தியின் மனதைக் கொள்ளை கொண்டது. சிரவண குமாரைப் போலவே தாமும் தம் பெற்றோர்களின் விருப்பத்துக் கிணங்க நடக்கவேண்டுமென்று மனதில் நிச்சயஞ் செய்துகொண்டார்.

அவ்விதமே அரிச்சந்திர நாடகமும் அவருடைய மனதைக் கவர்ந்தது. அரிச்சந்திரர் கதையை அறியாதவரும் இந்த நாட்டில் உண்டோ? விசுவாமித்திர ரிஷி, அரிச்சந்திரர்மீது பகைமைகொண்டு, அவரைப் பொய் சொல்லச் செய்யத் தம்மாலான உபாயங்களெல்லாம் செய்தார். அவர் வேண்டுகோளுக் கிணங்கி, அரிச்சந்திரர் தம் அரசுரிமையை முனிவருக்குத் தாரை வார்த்தார்; தம் மனைவி மைந்தனுடன் அயல்நாடு சென்றார்; முனிவரின் சூழ்ச்சியால், தம் மனைவியையும் மைந்தனையு மிழந்தார்; சொல்லொணுக் கஷ்டங்களையும் அனுபவித்தார். உண்மை நெறி தவறாமல் நடப்பதே மேல் என்றெண்ணி அவ்விதமே நடந்து வந்ததால்தான், அரிச்சந்திரர் இக் கஷ்டங்களை யெல்லாம் அனுபவித்தார். இதனால், கடைசியாக என்றும் அழியாப் புகழைப் பெற்றார். அவர் எப்போதும் உண்மையையே பேசிவந்ததால், அவருக்குச்

சத்திய அரிச்சந்திரர் என்று பெயர் வழங்குகிறது. இந்த நாடகத்தைப் பார்த்த காந்தி தாமும் அரிச்சந்திரனைப் போலவே நடந்துகொள்ள வேண்டுமென்று தீர்மானித்துக் கொண்டார். உண்மையைக் காப்பாற்ற எவ்வளவு பெரிய தியாகத்தைச் செய்தாலும் அது பெரிதாகாது; உண்மைதான் பெரிது. இதை நன்குணர்ந்த காந்தி சிறு வயது முதற்கொண்டே உண்மை பேசி வந்திருக்கிறார்; உண்மைக்கு அவர் மிகவும் உயர்ந்த ஸ்தானங் கொடுத்திருக்கிறார்; அவருடைய ஆயுள் முழுவதையும் உண்மையைக் கண்டு பிடிப்பதிலேயே கழிக்கத் தீர்மானித்திருக்கிறார்.

பள்ளிக் கூடத்தில் படித்தபோது காந்தி பல விஷயங்களைப் பற்றியும் படித்தறிந்தார். ஆனால், ஒரு விளையாட்டிலும் கலந்துகொள்ளவில்லை. அதில் அவருக்கு உற்சாகம் ஏற்படவில்லை. இப்படி அப்போது விளையாட்டுகளில் கலந்துகொள்ளாமலிருந்ததற்கு அவர் இன்றைக்கும் வருத்தப்படுகிறார். சிறுவர்களாயிருக்கும்போது சாயந்தர வேளையில், நன்றாக ஓடியாடி விளையாடினால், தேகத்துக்கு வலிமை ஏற்படும்; சுகம் ஏற்படும்;

நன்ருக உழைக்கும் சக்தி யுண்டாகும்; மனதுக்குத் தைரியம் ஏற்படும். விளையாட்டின் நன்மையை, காந்தி இப்போது நன்கு அறிந்திருக்கிருர். ஒவ்வொரு சிறுவனும் சிறுமியும் கட்டாயம் ஏதாவதொரு விளையாட்டை விளையாட வேண்டுமென்று இப்போது அவர் வற்புறுத்துகிருர். சிறு வயதில் ஓடி விளையாடாத குற்றத்துக்குப் பரிகாரமாக, காந்தி இப்போது அநேக வருஷ காலமாக, தினந்தோறும் நெடுந் தூரம் உலாவச் சென்று வருகிருர். தேச சேவைக்கு வேண்டிய தேக பலத்தையும் ஆரோக்கியத்தையும் காந்தி இதன் மூலம் சம்பாதித்துக் கொண்டிருக்கிருர்.

இதேமாதிரி, பள்ளிக்கூடத்தில் வாசிக்கும்போது தாம் நன்ருக எழுதக் கற்றுக்கொள்ள வில்லையே யென்று காந்தி வருத்தப்படுகிருர். படித்தவனுக்குத் தெளிவாக எழுதத் தெரிந்திருக்க வேண்டும். இல்லாவிட்டால் அவன் எழுதுவதைப் படிக்கும் பிறருக்குக் கஷ்டமாகு மல்லவா?



காந்திக்குப் பதின்மூன்ரும் வயதிலேயே கலியாணம் ஆகிவிட்டது. சிறுவயதிலேயே பிள்ளைகளுக்கும் பெண்களுக்கும் கலியாணம் செய்துவைப்பது ஒரு பழைய கெட்ட வழக்கம். அப்படிச் சிறுவயதில் கலியாணம் செய்வது இப்போது சட்ட விரோதம். காந்தி கலியாணத்தின் போது அந்தச் சட்டம் வரவில்லை.

ஒழுக்கம் திருந்துதல்

கெட்ட பழக்கமுள்ள சிநேகிதர்கள் சிலருடன் காந்தி சிறுவயதில் பழகிவந்ததால், மாமிசம் சாப்பிடும் பழக்கம் அவருக்கு ஏற்பட்டது. காந்தியின் பெற்றோர் வைஷ்ணவர்கள் ; மாமிசத்தை நினைக்கவும் மாட்டார்கள் ; பார்க்கவும் மாட்டார்கள். காந்தி மாமிசம் சாப்பிட்டது அவர்களுடைய மதத்துக்கே விரோதம். ஒருநாள் இராத்திரி சந்திரன் நன்றாகப் பிரகாசித்துக் கொண்டிருந்தான். காந்தியும் அவருடைய நண்பர்களும் ஆற்றங் கரைக்குச் சென்றார்கள்; அங்கே யாருக்கும் தெரியாமல் மாமிச ஆகாரத்தை உண்டார்கள். மாமிசம் சாப்பிடும் போதே காந்தியின் நெஞ்சும் மார்பும் படபட வென்று அடித்துக் கொண்டன. அன்றிரவு முழுதும் 'மாமிசம் சாப்பிட்டு விட்டோமே' என்ற மனோவேதனையால், அவருக்குத் தூக்கம் வராமல் கஷ்டப்பட்டார். தமது வயிற்றுக்குள் ஒரு ஆட்டுக் குட்டி இருந்துகொண்டு, "என்னைக் கொன்று இப்பாவிகள் தின்று விட்டார்களே!" என்று கத்துவதுபோல் அவருக்குத் தோன்றிற்று. மாமிசம் சாப்பிட்டால் தேகத்துக்குப் பலமும், மனதுக்குத் தைரியமும் வரும் என்று சிலர் சொன்னார்கள். அதைக் கேட்டுக்கொண்டுதான் காந்தி மாமிசம் சாப்பிட இசைந்தார். மாமிசம் சாப்பிட்டால், தமது பயங்கொள்ளித் தனத்தையும், கூச்சத்தையும் போக்கிக் கொள்ளலாமென்று அவர் எண்ணினார். ஆனால் மாமிசம் சாப்பிட்டதில் ஒருவிதமான நன்மையும் அவருக்கு ஏற்

படவில்லை. மாமிசம் சாப்பிடுவதுடன், சுருட்டுப் பிடிக்கும் கெட்ட வழக்கமும் காந்திக்கு ஏற்பட்டது. சுருட்டு வாங்கக் கையில் காசில்லாதபோது, பீடி வாங்கிக் குடித்தார். பீடி வாங்கவும் தம் கையில் காசில்லாதபோது, வீட்டிலிருந்து பணம் திருடினார். இப்படிச் சில நாட்கள் கழிந்தன. ஒரு நாள், இவ்வாறு மாமிசம் சாப்பிடுவதும் பணம் திருடுவதும் புகை பிடிப்பதும் மிகவும் கெட்ட வழக்கமென்று அவருக்குப் பட்டது. இவற்றை உடனே நிறுத்திவிட வேண்டுமென்று மனதில் நிச்சயம் செய்துகொண்டார். அது மாத்திரமன்றி, தாம் இவ்வளவு காலமாக ஒளிமறைவாக நீதி தவறி நடந்ததைப் பற்றியெல்லாம் ஒன்றையும் ஒளிக்காமல் தம் தகப்பனாரிடம் சொல்லிவிட வேண்டும் என்றும் நிச்சயம் செய்துகொண்டார்.

அப்போது அவருடைய தகப்பனார் காய்ச்சலாய்ப் படுத்திருந்தார். அவர் முன்கோபி. ஆதலால், காந்தி அவரிடம் தம் குற்றங்களை நேரில் சொல்லப் பயந்தார்; எனினும், தாம் செய்த குற்றங்களையெல்லாம் விவரமாக ஒரு கடிதத்தில் எழுதி, தம் தகப்பனாரிடம் கொடுத்தார். அவருடைய தந்தையும் தம் மகன் எழுதிய கடிதத்தைக் கவனமாக வாசித்தார்; பெருமூச்சு விட்டார்; ஒன்றும் பேசவில்லை. காந்தியைக் கோபித்துக் கொள்ளவு

மில்லை. ஆனால், அவர் கண்களினின்றும் தாரை தாரை யாகக் கண்ணீர் வடிந்தது; விம்மி விம்மி அழுதார். தம் மகன்மீது இருந்த அன்பின் பெருக்கத்தினாலேயே அவர் இம்மாதிரி கண்ணீர் வடித்தார். இதனால், தகப்பன், மகன் இருவருடைய இருதயமும் பரிசுத்த மடைந்தது. தந்தை கண்ணீர் விடுவதைக் கண்ட காந்தியின் மனது உருகியது. அப்பொழுதே, அவ்விடத்திலேயே, இனி அநீதியாக நடந்து கொள்வதில்லை யென்று மனதில் உறுதி செய்து கொண்டார். அவ்விதமே நடந்தும்வந்தார். தகப்பனா ரிடம் தாம் செய்த குற்றங்களைச் சொல்ல இவருக்கு ஏற் பட்ட தைரியத்தினாலேயே இவர் தம் தீய நடத்தைகளை உதறித் தள்ள முடிந்தது.

இதன் பிறகு, காந்திக்குப் பல உண்மைகள் தென்பட் டன. அஹிம்சையில் இவருக்குப் பற்றுதல் ஏற்பட்டது. அதாவது, எந்த உயிருள்ள பிராணிக்கும், எவ்விதத் துன் பத்தையும், மனதினால் எண்ணவோ, வார்த்தையால் உண் டாக்கவோ, செய்கையால் விளைவிக்கவோ கூடாது என்ற நீதியைக் கைக் கொண்டார். இதனால், கடவுள் படைத்த சகல ஜீவராசிகளிடத்தும் அன்பும், கடவுளிடம் பக்தியும் இவருக்கு ஏற்பட்டன. ஒழுக்கமாகத் தம் வாழ்க்கையை நடத்தவும் தீர்மானித்துக் கொண்டார். ஒழுக்கமாக நடந்து கொள்ள வேண்டுமானால் எப்போதும் உண் மையே பேசவேண்டும் என்பதையும் நன்குணர்ந்தார். அவ்விதமே எப்போதும் உண்மையே பேசிவந்தார். தம் செய்கையிலும் உண்மையாகவே யிருந்தார். அதே சமயத்தில், உண்மையைக் கடைப்பிடித்தொழுகும் ஒருவன் மற்ற மதத்தாரோடு அன்புடன் நடந்துகொள்ள வேண்டு மென்பதையும் கண்டுகொண்டார். தீமை செய்தவர்களுக்கு

நன்மை செய்வதுதான் நேர்மை - பெருந்தன்மை - என்ற திட நம்பிக்கையும் அவருக்கு ஏற்பட்டது. ஹிந்துமத சம்பந்தமான பக்தி மார்க்க நூல்களைத் தம் தாய்ப் பாஷையான குஜராத்தியில் படிப்பார்; பல தோத்திரப் பாட்டுகளையும் பாடுவார். அவற்றுள் ஒரு தோத்திரம் சிறந்த நீதி முறையைக் கூறுகிறது:

"குடிக்க நீர் கொடுத்தவனுக்கு வயிறாரச் சாப்பாடு போடு; கருணையுடன் வரவேற்கும் ஒருவனது கை பிடித்து அவனுடைய பாதம் பணி; ஒரு காலணக் கொடுத்தவனுக்குத் திரும்பி ஒரு பவுன் கொடு! ஒருவன் செய்த நன்மைக்கு நாம் பத்து மடங்கு அதிகமாகத் திருப்பிச் செய்ய வேண்டும். ஒரு பெரிய மனிதன் எல்லாரையும் சமமாகப் பாவிப்பான்; எப்போதும் தீமையே இழைப்பவர்களுக்கும் நன்மையே செய்வான்." இதுதான் அந்தப் பாட்டில் அடங்கிய நீதிமுறை. காந்தி இந்த நீதி முறையைத் தம் வாழ்வில் அனுசரிக்க வேண்டுமென்று தீர்மானித்தார்.

பாரிஸ்டர் படிப்பு

1887-ஆம் வருஷத்தில் காந்தி மெட்ரிகுலேஷன் பரீ கைஷயில் தேறினர். குடும்ப நண்பர்கள் பலர் காந்தியின் தந்தையிடம் சென்று காந்தியை இங்கிலாந் துக்குப் படிக்க அனுப்ப வேண்டுமென்று சொன்னர்கள். ஆனல், இதற்குத் தடையாகப் பல கஷ்டங்களும் ஆக்ஷே பங்களும் ஏற்பட்டன. காந்தியை உடனே இங்கிலாந்துக்கு அனுப்புவது என்பது சுலபமா யிருக்கவில்லை. பணக் கஷ்டம் ஒரு புறமிருக்க, தங்கள் மகனை விட்டு எப்படிப் பிரிந்திருப்பது என்பது தாய்க்கும் தந்தைக்கும் கஷ்டமா யிருந்தது. "இங்கிலாந்துக்கு ஹிந்து வாலிபர்கள் சென் ருல், அவர்கள் அந்த நாட்டாரின் சில கெட்ட வழக்கங் களைக் கைப்பற்றுகிருர்கள். அதனல் பல குடும்பங்கள் கெட்டுப்போகின்றன" என்று சிலர் சொல்லி விட்டார்கள். இதைக் கேட்ட தாயாருக்குப் பயமும் உண்டாயிற்று. இங் கிலாந்துக்குத் தம் மகன் சென்ருல், இந்திய நாட்டுக்குத் திரும்பியே வராமல் ஒரு வேளை அங்கேயே இருந்து விடு வானே என்றும் தாயார் எண்ணினர். "சீமைக்குச் சென்ருல், மாமிசம் சாப்பிடாமல் இருக்க முடியாது; சாராயம் குடிக்காமலும் இருக்க முடியாது. இங்கிலாந்தில் குடிப் பழக்கம் இல்லாதவர்களே யில்லை. அங்கே ஆண்கள், பெண்கள் எல்லாருமே குடிப்பது சகஜம்" என்று காந்தி யின் தாயார் கேள்விப்பட்டார். "இங்கிலாந்துக்குக் காந்தி சென்ருல், ஒரு புதிய ஆங்கில மனைவியுடன் திரும்புவார்"

என்றும் சிலர் சொன்னார்கள். இவற்றை யெல்லாம் கேட்ட காந்தியின் தாயார், அவரை இங்கிலாந்துக்கு அனுப்ப இசையவில்லை.

என்றாலும், காந்திக்கு இங்கிலாந்து செல்ல அதிர்ஷ்டம் இருந்ததால், இக் கஷ்டங்களும் ஆக்ஷேபங்களும் வெகு சீக்கிரத்தில் ஒழிந்தன. காந்தியின் தமையனார் காந்தியைச் சீமைக்கனுப்பப் பணஉதவி செய்ய முன்வந்தார். ஆனால், காந்தி மூன்று வாக்குறுதிகளைத் தரவேண்டுமென்று அவருடைய தாயார் கேட்டார். "மாமிசம் சாப்பிடுவதில்லை; சாராயம் குடிப்பதில்லை; பெண்களை நாடாமல் பரிசுத்தமான வாழ்க்கை நடத்துவேன்" என்று காந்தி பிரதிக்ஞை செய்யவேண்டுமென்று, அந்த அம்மையார் சொன்னார். காந்தியும் அவ்வாறே பிரதிக்ஞை செய்தார். அதன் பிறகு, எல்லாருடைய ஆசியையும் பெற்று, காந்தி 1888-ஆம்வருஷத்தில் இங்கிலாந்துக்குப் புறப்பட்டார்.

கப்பலில் பிரயாணம் செய்தபோது, காந்தி அதிகக் கூச்சமடைந்தார். ஆங்கிலத்தில் பேசுவது அவருக்கு மிக்க கஷ்டமாக இருந்தது. தம் முன் வைத்த உணவு மரக்கறி உணவோ, மாமிச உணவோ என்று கேட்கவும் கூச்சப்பட்டு, சாப்பிடத் தயங்கினார். கப்பலில் மற்றப் பிரயாணிகளுடன் காந்தி கலந்து கொள்ளவுமில்லை; பேசவுமில்லை. அதே கப்பலில் வேறோர் இந்தியர் பிரயாணம் செய்தார். மற்றப் பிரயாணிகளுடன் நன்றாக உறவாடி ஆங்கிலத்தில் பேசுமாறு காந்திக்கு அவர் சொன்னார். ஆனால், காந்திக்குக் கூச்சம் அதிகமாயிருந்ததால், அவரால் அவ்விதம் செய்ய முடியவில்லை.

ஒருநாள் கருணை மிகுந்த ஆங்கில கனவான் ஒருவர் இவருடன் வலுவில் வந்து பேசினார். காந்தி அவரை

நோக்கி, தாம் மரக்கறி உணவையே சாப்பிடுவதாகச் சொன்னார். அதைக் கேட்ட அந்த ஆங்கில கனவான் சிரித்துக்கொண்டு, "வெகு சீக்கிரத்தில் நீங்கள் மாமிச ஆகாரம் சாப்பிட நேரிடும். இங்கிலாந்து மிகவும் குளிர்ந்த தேசமாதலால், அங்கே நீங்கள் மாமிசம் சாப்பிடாமல் இருக்க முடியாது" என்று சொன்னார். 'மாமிசம் சாப்பிடுவதில்லை' யென்று காந்தி தம் தாயாரிடம் பிரதிக்ஞை செய்திருந்ததால், 'எக்காரணங் கொண்டும் மாமிச உணவை உட்கொள்ளவே கூடாது' என்று மனதில் உறுதி செய்து கொண்டார்.



இங்கிலாந்தில் மரக்கறிகளைச் சாப்பிடுவது காந்திக்கு மிகவும் கஷ்டமாயிருந்தது. உப்பு, மிளகாய்சேராத வெந்த காய்களை எவ்வளவு நாள்தான் சாப்பிட முடியும்? ஊரிலிருந்து கொண்டுவந்த தித்திப்புப் பலகாரங்களைச் சில நாட்கள்வரையில் வைத்துக்கொண்டு தின்று வந்தார். பலவிதங்களில் இவருடைய செலவும் அதிகரித்தது. இங்கிலாந்தை யடைந்ததும் ஒரு பெரிய மனுஷனைப்போல் நடந்துகொள்ள வேண்டுமென்று இவருக்குத்

தோன்றியது. அந்தக் காலத்தில் இங்கிலாந்தில் பிரெஞ்சு பாஷை கற்பது, படித்தவர்களுக்கு லக்ஷணமாய்க் கருதப் பட்டது. அதனால் கௌரவமும் மதிப்பும் உண்டு. காந்தியும் பிரெஞ்சு பாஷை கற்க ஆரம்பித்தார். பிறகு நாட்டியம் ஆடவும் பிடில் வாசிக்கவும் கற்றுக்கொண்டார். இப்படிச் சில நாட்கள் சென்றபின், காந்தி தமது ஆங்கில வாழ்வைப் பற்றிச் சற்று ஆழ்ந்து சிந்தித்தார். தம் அண்ணன் வெகு கஷ்டப்பட்டு மிச்சம் பிடித்துத் தனக்கு அனுப்பும் பணத்தைத் தம் மனம் போனபடி செலவழிப்பது சரியல்லவென்று நினைத்தார். உடனே, பிரெஞ்சு பாஷை கற்பதையும் நாட்டியம் ஆடுவதையும் பிடில் வாசிப்பதையும் அறவே ஒழித்தார். எளிய வாழ்க்கை முறையைக் கடைப்பிடித்தார். தம் செலவைப் பலவகையிலும் குறைத்துக் கொண்டார். குறைந்த வாடகையில் ஓர் அறையை வாடகைக்கு அமர்த்திக் கொண்டார்; தாமே சமையல் செய்து சாப்பிட ஆரம்பித்தார்; ஒரு விநாடியும் வீணாக்காமல் படிப்பிலே கவனம் செலுத்தினார்.

இங்கிலாந்தில் மரக்கறி உணவுச் சங்கத்தார் நடத்தி வந்த ஒரு பத்திரிகையைத் தாம் நிர்வகிக்க, காந்தி ஏற்றுக் கொண்டார். பிறகு அச்சங்கத்தினர்களில் சிலரைச் சந்தித்தார். அதன்மேல் மரக்கறிச் சங்கத்தில் தாமும் ஒரு அங்கத்தினராய்ச் சேர்ந்துகொண்டார். அவர்களுடன் பழகியதின் பலனாக, காப்பி, தேயிலைப் பானங்களைக் குடிப்பதையும் ஒழித்தார். காய்கறிகள், பழங்கள், கோக்கோ இவற்றையே சாப்பிட்டு வந்தார். இதனால் அவருடைய உடம்பும் தேர்ச்சி யடைந்தது. அவருக்கு ஆரோக்கியமும் திடமும் ஏற்பட்டன. முன்னிலும் நன்றாகப் படிக்க முடிந்தது. ஞாபக சக்தியும் அதிகரித்தது; சுறுசுறுப்

பும் உண்டாயிற்று. அவர் நீண்ட தூரம் உலாவி வந்த தால், தேகப் பயிற்சியால் உண்டாகும் சகல அனுகூலங் களையும் அடைந்தார்.

பிறகு, பாரிஸ்டர் பரீட்சையில் தேறினர். இங்கி லாந்தில் இருக்கும்போதுதான், நேரத்தின் மதிப்பை, காந்தி நன்குணர்ந்தார். தமது நேரத்தில் ஒரே ஒரு நிமி ஷத்தையும் வீணுக்குவது பெருங்குற்றம் என்றெண்ணினர். மேலும் அக்காலத்தில் காந்தி, 'பெரியோர்கள் தமக் கென்று வாழார்; பிறர்க்குரியர்' என்ற உயர்ந்த கொள் கையை மேற்கொண்டு, எளிய வாழ்க்கை முறைகளை யனு சரித்து, உன்னத நோக்கங்களுடனும் சிந்தனையுடனும் வாழ்ந்துவந்தார்.

வக்கீல் தொழில்

பாரிஸ்டர் பரீட்சை கொடுத்துவிட்டு, காந்தி தம் தாய் நாடு திரும்பினுர். அப்போது அவருடைய தமையனுர் பம்பாய்த் துறைமுகத்துக்குச் சென்று அன்புடன் தம் தம்பியை வரவேற்ருர். தாயார் சில நாட்களுக்கு முன்பாகத்தான் இறந்து போனுர் என்ற செய்தித் தம் தமையனிடமிருந்து காந்தி அறிந்துகொண்டார். இந்தத் துக்க சமாசாரத்தை எழுதினுல் காந்திக்கு விசனமேற்பட்டு அதனுல் அவருடைய படிப்புக்குக் கெடுதல் உண்டாகும் என்றெண்ணி, அவர் தமையன் முன்னுடி எழுதவில்லை. பம்பாய் வந்திறங்கியதும் இச் செய்தியைக் கேட்ட காந்திக்குப் பெருந் துக்கம் உண்டாயிற்று. என்ருலும், இந்தத் துக்கத்தில் அவர் மனுேதைரியத்தை இழக்காமல் மனதைச் சமாதானப் படுத்திக்கொண்டார். அடிக்கடி அவர் தம்முடைய தாயாரை நினைத்துக்கொண்டு, அவருடைய அன்பு, கடவுள் பக்தி, ஒழுக்கம் முதலியவற்றைப் புகழ்ந்து பேசுவார். தாமும் அதேமாதிரி நடக்க வேண்டுமென்று நினைப்பார்.

இந்தியாவுக்கு வந்துசேர்ந்த சில நாட்களில், அவர் பம்பாயில் பாரிஸ்டர் வேலை செய்ய ஆரம்பித்தார். என்ருலும், பம்பாயில் அவருக்குப் போதுமான வரும்படி கிடைக்கவில்லை. ஆகையால், தம் தகப்பனுர் திவான் வேலை பார்த்த ராஜகோட்டுக்குச் சென்ருர். அங்கே அவருக்கு ஒரு மாதத்துக்கு முந்நூறு ரூபாய்வரை வரும்படி வந்தது. இச்சமயத்தில், தென்னுப்பிரிக்காவில் வியாபாரம் செய்து வந்த ஒரு முஸ்லீம் வர்த்தகர், டர்பன் நியாய ஸ்தலத்

தில் ஒரு வழக்கை நடத்த, காந்தியை அழைத்தார். காந்தியும் டர்பனுக்குச் சென்றார். டர்பனில் இந்தியர்களை வெள்ளையர்கள் மிகவும் அவமரியாதையாக நடத்தினார்கள். இதைப்பற்றி காந்தி முன்னமே கேள்விப்பட்டிருந்த போதிலும், இப்போது அதை நேரில் காணும் சந்தர்ப்பம் அவருக்கு ஏற்பட்டது; அன்றியும், அதைத் தாமும் அனுபவிக்கவும் நேர்ந்தது.

வழக்கை நடத்த இவர் டர்பன் நியாய ஸ்தலத்துக்குச் சென்றார். இவர் தம் தலையில் இந்தியத் தலைப்பாகை அணிந்திருந்தார். இதைப் பார்த்த நியாயாதிபதி தலைப்பாகையை எடுக்கும்படி சொல்ல, காந்தி "மாட்டேன்" என்று மறுத்தார். ஆகவே, கோர்ட்டை விட்டு, காந்தி வெளியேற வேண்டியதாயிற்று. ஐரோப்பிய உடை

யோடு இந்தியத் தலைப்பாகையை அணியக் கூடாது என்று நியாயாதிபதி ஆக்ஷேபித்தாராம்.

சில நாட்களுக் கப்புறம், காந்தி டர்பனிலிருந்து பிரிடோரியாவுக்கு ரயிலில் சென்றார். முதல் வகுப்பு டிக்கட்டுடன், அதே வகுப்பில் ஏறினார். இரயில்வே அதிகாரிகள் இவரைக் கீழே யிறக்கிக் கடைசியிலிருந்த ஒரு வண்டிக்குப் போகும்படி சொன்னார்கள். காந்தி அவ்விதம் செய்ய மறுத்தார். பிறகு, போலீஸார் வந்து இவரை வண்டியை விட்டு வெளியே தள்ளினார்கள். இதன்மேல் வேறு எந்த வண்டியிலும் போக இவர் மறுத்தார்; டர்பனிலேயே தங்கியிருந்தார். என்றாலும், மறுநாள் இரயில்வே அதிகாரிகள் இவரை முதல் வகுப்பிலேயே பிரயாணம் செய்ய அனுமதித்தார்கள்.

இதற்குள்ளாக, எந்த வழக்கை நடத்த வந்தாரோ அந்த வேலையும் முடிந்தது. ஆகவே, காந்தி இந்தியாவுக்குத் திரும்பிப் போகத் தயாராக இருந்தார். டர்பனில் உள்ள இந்தியர்கள் இதை யறிந்து, காந்தி புறப்பட்டுப் போவதற்கு முன்பு அவருக்கு ஒரு பிரிவுபசாரம் நடத்தினார்கள்; அச்சமயத்தில் தென்னாப்பிரிக்காவில் இந்தியர்களின் கஷ்டங்களை யெல்லாம் காந்திக்கு எடுத்துச் சொன்னார்கள்; காந்தி இந்தியாவுக்குத் திரும்பிப் போகக் கூடாது என்றும், தென்னாப்பிரிக்காவிலேயே தங்கி இந்தியர்களுக்குத் தலைமை வகித்து அவர்களுடைய கஷ்டத்தை ஒழிக்க வேண்டுமென்றும் அவரை வேண்டிக்கொண்டார்கள். அவர்களின் கஷ்டங்களைக் கேட்டு மனமிளகிய காந்தி, தென்னாப்பிரிக்காவிலேயே தங்கினார். மூன்று வருஷங்கள் கடந்த பின்னர், காந்தி தம் மனைவிமக்களையும் தென்னாப்பிரிக்காவுக்குக் கூட்டிப்போக இந்தியாவுக்கு வந்தார்.

மனைவி மக்களோடு இவர் ஆப்பிரிக்காவுக்குத் திரும்பிச் சென்ற கப்பல் ஒரு புயல் காற்றில் சிக்கிக்கொண்டது. அந்தப் புயல் நெடுநேரம் அடித்ததால் "உயிர் தப்ப முடியாது; கப்பலுடன் சமுத்திரத்தில் மூழ்கித்தான் போவோம்" என்று யாவரும் பயப்பட்டார்கள். அந்த ஆபத்தான சமயத்தில் பிரயாணிக ளெல்லாரும் ஒன்று சேர்ந்து கடவுளைப் பிரார்த்தித்தார்கள். ஹிந்துக்களும், கிறிஸ்தவர்களும், முகம்மதியர்களும் எவ்விதமான வித்தியாசமுமின்றி அந்த அபாயத்தில் ஒன்றுசேர்ந்து கடவுளைப் பிரார்த்தித்தார்கள். கடவுளும் அவர்களுடைய பிரார்த்தனைக்கு இரங்கினார். வானம் வெளிறிட்டது. சமுத்திரத்தின் கொந்தளிப்பு நின்றது. புயலின் அமளியும் ஓய்ந்தது. உடனே

யாவரும் கடவுளை மறந்தனர். பிராயாணிகள் எல்லாரும் உண்ணவும் குடிக்கவும் ஆடவும் பாடவும் வேடிக்கையாகக் காலத்தைக் கழிக்கவும் ஆரம்பித்தனர். புயல் காற்றடித்த சமயத்தில் பயப்பட்டு அதைரியப்பட்ட பலருக்கும், காந்தி உற்சாகத்தையும், கடவுளிடம் நம்பிக்கையையும், தைரியத்தையும் மூட்டினார். இதனால் கப்பலில் உள்ளவர்கள் எல்லாரும் காந்தியை அறிய நேரிட்டது. அல்லாமலும், காந்திக்கு இதனால் பலருடைய நட்பும் ஏற்பட்டது. இந்தப் புயல்காற்று நண்பர்களெல்லாம் பிற்காலத்தில் காந்திக்கு அதிக உதவி செய்தனர்.

தென்னாப்பிரிக்க சேவை

டர்பனை அடைந்ததும் காந்தி ஒரு நல்ல வீட்டை அமர்த்திக்கொண்டு அதை வெகு சீராக அலங்கரித்துச் சௌகரியம் உள்ளதாகச் செய்துகொண்டார். ஒரு நாள் தம் வீட்டு வரவு செலவுக் கணக்கைப் பார்த்தார்; தாம் அதிகமாகப் பணம் செலவழிப்பதைக் கண்டார்; உடனே, வேண்டாச் செலவுகளை நிறுத்தினார். வண்ணனுக்கு இவர் அதிகக் கூலி கொடுத்துவந்தார். என்றாலும் அவனுடைய வெள்ளை நன்றாக இருக்கவில்லை. ஆகவே, காந்தி அவனிடம் துணி போடுவதை



நிறுத்தித் தம் துணிகளையெல்லாம் தாமே வெளுக்க ஆரம்பித்தார். துணி வெளுப்பதைப் பற்றி ஒரு புத்தகத்தையும்

வாங்கித் தாம் படித்ததோடு, தம் மனைவியான கஸ்தூரி பாய்க்கும் துணிகளை வெளுக்கச் சொல்லிக் கொடுத்தார். தம் துணியைத் தாமே வெளுப்பதில் காந்திக்கு வெகு ஆனந்தம் ஏற்பட்டது.

முதல் நாள் காந்தி தாமே வெளுத்த ஒரு காலரைப் போட்டுக்கொண்டு கோர்ட்டுக்குப் போனார். அதற்குக் கஞ்சி அதிகம் போட்டிருந்ததால், அதிலிருந்து மாவு கீழே உதிர்ந்தது. இதைக் கண்ட பிற பாரிஸ்டர்கள் சிரித்தார்கள்; காந்தியை ஏளனமும் செய்தார்கள். அதை காந்தி பொருட்படுத்தவில்லை. "நான் என் துணிகளை வெளுக்க ஆரம்பித்தது இதுதான் முதல் தடவை. அதனால்தான் இந்தப் பிசகு ஏற்பட்டது. இருந்தாலும் பரவாயில்லை. துணி வெளுப்பதில் ஒரு தனி ஆனந்தம் இருக்கிறது" என்றார். ஒருவர் "உங்கள் துணியை நீங்கள் ஏன் சலவைச்சாலைக்கு அனுப்பக்கூடாது?" என்று கேட்டார். அதற்கு காந்தி "சலவைச்சாலைக்குக் கூலி கொடுக்க என்னால் முடியாது. ஆகையால் என் துணியை நானே துவைத்து வெளுக்கிறேன்" என்றார். இப்படிச் சில நாட்கள் சென்ற பிறகு துணி வெளுப்பதில் காந்திக்கு நல்ல திறமை ஏற்பட்டது. பெட்டி போடவும் கற்றுக்கொண்டார். மற்ற பாரிஸ்டர்களுக்கு காந்தியினுடைய செய்கை பிடிக்கவில்லை. ஆனால், தம் வேலையைத் தாமே செய்து கொள்வதில் காந்திக்கு அதிக உற்சாகமும் நம்பிக்கையும் ஏற்பட்டன. ஒவ்வொருவரும் தம் கையினால் ஏதாவது ஒரு வேலை செய்யப் பழகிக்கொள்ள வேண்டியது அவசியம் என்றும், எவ்விதமான தொழிலும் ஈனமான தன்று என்றும் காந்தி இப்போதும் வற்புறுத்தி வருகிறார்.

தென்னாப்பிரிக்காவில் காந்தியின் வீடு ஓர் அன்ன

சத்திரம்போல் இருந்தது. சிநேகிதர்களாகட்டும் அந்நியர்களாகட்டும் இந்தியர்களாகட்டும் பிறதேசத்தவர்களாகட்டும், கறுப்பு மனிதர்களாகட்டும் வெள்ளையர்களாகட்டும் யாவரையும் தம் வீட்டுக்கு அவர் தாராளமாக வரவேற்ருர். வீட்டில் யார் வந்து தங்கினலும் அவர்களைத் தம் சொந்தக் குடும்பத்தினர் என்றே காந்தி கருதினர். ஒருவருக்கொருவர் ஒத்தாசையும் பணிவிடையும் செய்து கொள்ளவேண்டும் என்பது காந்தியின் கொள்கை. தீண்டப்படாதார் என்ற வகுப்பைச் சேர்ந்த கிறிஸ்தவரொருவர் ஒரு தடவை காந்தியுடன் தாமதித்தார். காந்தி மற்றவர்களை எப்படி உபசரித்தாரோ அம்மாதிரியே இந்த ஆதிதிராவிடக் கிறிஸ்தவ விருந்தாளியையும் உபசரித்தார். வித்தியாசம் ஒன்றும் பாராட்டவில்லை. ஆனல், காந்தியின் மனைவியாருக்கு இது பிடிக்கவில்லை. அந்த அம்மையாருக்கு அக்காலத்தில் தீண்டப்படாதாரிடம் ஒருவித அருவருப்பு இருந்தது. அந்தக் கிறிஸ்தவ விருந்தாளிக்குப் பணிவிடைசெய்ய அந்த அம்மணி உடன்படவில்லை. இதை ஒரு நாள் காந்தி நேரில் கண்டுவிட்டார். தம் மனைவியை அதற்காகக் கோபித்துக்கொண்டு, "வீட்டைவிட்டு வெளியே போய்விடு!" என்று அதட்டினர். அதற்கு அந்த அம்மணி "இந்திய தேசத்தில் இருந்தால், சொந்தக்காரர் வீட்டுக்குச் செல்லக்கூடும். தென்னுப்பிரிக்காவில் நான் எங்கே செல்வது?" என்று கேட்டார். அத்துடன் காந்தியிடம் தம் அபிப்பிராயத்தையும் எடுத்துச் சொன்னர். கடைசியிலே, காந்தி தம் செய்கைக்கு வருந்தினர். தம் அபிப்பிராயமே நியாயமா யிருந்தாலும், தம் மனைவியிடம் தாம் இப்படிக் கோபப் பட்டிருக்கலாகாது என்று உணர்ந்தார். பிறகு, இருவருக்கும் சமரசம் ஏற்பட்டது.

போயர் யுத்தத்தின் போது காந்தி தென்னாப்பிரிக்காவில்தான் இருந்தார். தமக்குப் போயர்களிடத்து அபிமானம் இருந்தபோதிலும் ஆங்கிலேயருக்குத் தம்மாலான உதவியைச் செய்யக் கடமைப்பட்டதாக, காந்தி எண்ணினார்; இந்தியர்கள் கேவலம் சுயகாரியப் புலிகள் அல்லர் என்றும், சமயம் வாய்த்தால் எந்தவிதமான கஷ்டத்தையும் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருப்பார்கள் என்றும் நிரூபித்துக் காட்டினார். சண்டையில் அடிபட்டவர்களுக்குச் சிகிச்சை செய்வதற்கென்று இந்திய சிகிச்சைப் படையொன்றைத் திரட்டினார். இவர்களின் வேலைத் திறத்தையும் வீரத்தையும் யாவரும் மெச்சி இந்தியர்களை வெகுவாகப் பாராட்டினார்கள். இந்தியர்களை முன்னிலும் அதிகமாக ஆங்கிலேயரும் மற்றவர்களும் மதித்தார்கள்.



காந்திஜி நடுவில் உட்கார்ந்திருக்கிறார்

சண்டை தீர்ந்ததும் காந்தி இந்தியாவுக்குத் திரும்பி வர எண்ணினார்; தமக்கு விடை கொடுக்கும்படி தம் நண்பர்களைக் கேட்டார். தென்னாப்பிரிக்க இந்தியர்கள் "நாங்கள் வேண்டும்போது நீங்கள் திரும்பவும் வருவதாயிருந்தால்தான் நீங்கள் இந்தியாவுக்குப் போகலாம்" என்றார்கள். அதற்குச் சம்மதித்து, காந்தி இந்தியாவுக்குத் திரும்பினார். அவர் புறப்படுவதன் முன்பு, ஒரு பிரிவுபசார

மும் நடத்தினர்கள். அச்சமயம் தங்கத்திலுைம் வெள்ளியினுலும் செய்யப்பட்ட பல ஞாபகச் சின்னங்களையும் தட்டுக்களையும் கோப்பைகளையும், தங்கள் நன்றியறிதலின் அறிகுறியாக, காந்திக்கு அவர்கள் கொடுத்தார்கள். அவற்றையெல்லாம் வைத்துக்கொண்டு என்ன செய்வதென்று காந்திக்கு விளங்கவில்லை. அவர்மனைவியோ எல்லாவற்றையும் எடுத்துக்கொண்டு போகவேண்டும் என்று ஆசைப்பட்டார். இதை காந்தி விரும்பவில்லை. ஒரு பொதுஜன ஊழியன் இந்தச் சன்மானங்களைப் பெறக்கூடாதென்று அவர் எண்ணினர். ஆகையால், அவர்கள் கொடுத்த விலைபெற்ற சாமான்கள் யாவற்றையும் அவர்களுக்கே காந்தி திருப்பிக் கொடுத்துவிட்டார்.

இந்தியாவுக்குவந்ததும் காந்தி மறுபடியும் பாரிஸ்டர் தொழில் புரிந்தார்; ஆனல், பல இந்தியத் தலைவர்களையும் சந்தித்தார். அவர்களுள் ஒருவர் கோபால கிருஷ்ண கோகலே. இவர்தான் இந்திய ஊழியர் சங்கத்தை ஏற்படுத்தியவர். காந்தியைத் தம் கூடப்பிறந்தசகோதரரைப் போல, கோகலே வெகு அன்புடன் நடத்தினர். காந்தி இந்தியாவுக்கு வந்து சில மாதங்களாயின. அதற்குள்ளாக, மறுபடியும் தென்னுப்பிரிக்காவுக்கு வரும்படி காந்திக்கு ஒரு தந்தி வந்தது. உடனே காந்தி தென்னுப்பிரிக்காவுக்குச் சென்றார். அங்கிருந்த இந்தியர்கள் அளவிலா மகிழ்ச்சியடைந்தனர்.

ஆசிரம வாழ்க்கை

மேலான பல இலக்கியங்களை காந்தி வாசித்து வந்தார். அப்படி அவர் வாசித்த பல புத்தகங்களில் இரண்டு நூல்கள் அவருக்கு ஒரு புதிய நோக்கத்தையும் உணர்ச்சியையும் அளித்தன. அவற்றுள் ஒன்று பகவத் கீதை. இதைப் படித்ததும், காந்திக்கு உலக இன்பங்களிலும் பணத்திலும் சுகத்திலும் இச்சையற்றுப் போயிற்று. எளிமையைக் கைக்கொண்டு சாந்தமான மனதுடன் தம் வாழ்க்கையை நடத்த ஆரம்பித்தார். தம் கைப்பொருள் முழுவதையும் இந்திய மக்களின் நன்மைக்காகச் செலவழிக்க நிச்சயம் செய்துகொண்டார்.

மற்றொரு புத்தகத்தை ஆங்கில நண்பரொருவர் காந்திக்குக் கொடுத்தார். அதை எழுதினவர் ரஸ்கின் என்ற ஆங்கில நூலாசிரியர். இந்தப் புத்தகமும் அவரது கொள்கைகளை மாற்றின. இப் புத்தகத்தில் கூறியுள்ள உபதேசங்களின்படி தம் வாழ்க்கையை நடத்தத் தீர்மானித்தார். ஒருவன் தன்னுடைய சுகத்தை மேலாகக் கருதாமல் பிறர் நன்மைக்காக உழைக்க வேண்டும். வயிறு வளர்ப்பதற்காகவே பலர் பல தொழில்களைச் செய்கின்றனர். ஒருவன் வக்கீல் தொழிலையும் மற்றொருவன் விவசாயத்தையும் புரிவது ஜீவனம் செய்வதற்காகத்தான். ஆகையால், உழைப்பில் 'இது மேல்' 'இது கீழ்' என்று கிடையாதென்றும், எல்லா விதமான உழைப்புகளும் மேன்மையானவைதான் என்றும் இப் புத்தகம் கூறுகிறது.

இப்புதிய கொள்கைகளின்படி தம் வாழ்க்கையை நடத்துவதற்காக, நூறு ஏகர் பூமியை டர்பனுக்குச் சமீபத்தில் காந்தி வாங்கினர். அங்கே அவரும் அவருடைய நண்பர்களில் சிலரும் சில உறவினர்களும் வசித்தார்கள். எல்லாரும் எளிய வாழ்க்கையைக் கைக்கொண்டார்கள்; தங்களுக்கு வேண்டிய எல்லாப் பொருள்களையும் தாங்களே செய்து கொண்டார்கள். தோட்டத்தில் ஆரஞ்சுமரம், மாமரம் முதலியவற்றைப் பயிர் செய்தார்கள். அவற்றின் விளைவுகளையே உண்டு வசித்தார்கள். தாங்களே ரொட்டி செய்து கொண்டார்கள். தங்கள் வீட்டைத் தாங்களே சுத்தம் செய்து கொண்டார்கள். வேலையாள்களே கிடையாது. அங்கே பாம்புகள் அதிகமாயிருந்தமையால் முதலில் ஜனங்கள் வசிப்பதற்குப் பயப்பட்டார்கள். ஆனல், எல்லாரும் ஒன்று சேர்ந்து கஷ்டப்பட்டு உழைத்ததனல், பயம் நீங்கி எல்லாரும் சுகமாக வாழ்வதற்கு வசதி ஏற்பட்டது.

இதே சமயத்தில்தான் காந்தி பிரம்மசரிய விரதம் பூண்டார். தம் ஐம்புலன்களையும் அடக்கி, மனதிலும், வார்த்தையிலும் செய்கையிலும் பிறருக்குத் தீங்கிழைக்காமல் வாழும் ஒருவனே, பிரம்மசரிய விரதத்தை அனுஷ்டிப்பவனுவான். இவ்விரதத்தை மேற்கொண்ட காந்தி சந்யாசிபோல் வசிக்க நேர்ந்தது. தம் குடும்ப விஷயங்களை அறவே மறந்தார். வீண் வம்புகளையும், வெறும் பேச்சுக்களையும், வீணே நேரம் போக்குவதையும் அறவே ஒழித்தார். அவருடைய ஆசிரமத்தில் ஒருவரும் அரட்டையடிக்கவாவது அல்லது வெகுநேரம் கண்விழித்திருக்கவாவது கூடாது. அவர் கடவுளின் தாசனுக விளங்கினர். தம் நேரம் முழுவதையும் கடவுள் வழிபாட்டிலும் தியானத்திலும் சேவையிலுமே கழித்தார். எது பேசினுலும், செய்

தாலும், அதில் அவருடைய பரிசுத்தமான எண்ணம் துலங்கி நிற்கும். எப்போதும் ஓர் உன்னத நோக்கத் துடனேயே தம் வாழ்க்கையை நடத்திவந்தார். பொய் சொல்லிப் பிழைக்கும் தொழில் என்று ஜனங்கள் சொல் லும் வக்கீல் தொழிலைக் காந்தி நடத்தியபோதுங்கூட, அவர் பொய் சொன்னதே கிடையாது. ஒரு காலத்தில் தென்னாப்பிரிக்காவில் ஒரு நியாய ஸ்தலத்தில் வழக்கு நடத்திக் கொண்டிருக்கும்போது தம் கக்ஷிக்காரனுடைய வாதம் உண்மையான தல்லவென்று தெரிந்தவுடனே, காந்தி அந்த வழக்கைத் தள்ளிவிடும்படி நியாயாதிபதி யைக் கேட்டுக் கொண்டார். நியாயாதிபதிக்கும் கக்ஷிக்கார ருக்கும் உண்டான ஆச்சரியத்துக்கு அளவில்லை. காந்தி பாரிஸ்டர் தொழில் நடத்திய காலம் முழுதும் எவ்வித மான பொய் வாதத்தையும் ஆதரிக்கவில்லை. காந்தி மேற் கூறிய வழக்கில் தம் மனச்சாக்ஷிக் கேற்றவாறு நடந்து கொண்டதில், அவருடைய பேருக்காவது வக்கீல் தொழி லுக்காவது ஒருவிதமான பிரதிகூலமும் ஏற்படவில்லை. உண்மையிலேயே எல்லா ஜனங்களும் அவரிடத்து இன் னும் அதிகமான மரியாதையையும் அன்பையும் காட் டினார்கள். 'இவர் ஒரு பெரிய மானி, நேர்மையானவர், நம் பத் தகுந்தவர்' என்று ஜனங்கள் எண்ணினார்கள்.

தென்னாப்பிரிக்காவில் இந்திய வியாபாரியொருவர் அதிகாரிகளுக்குச் செலுத்தவேண்டிய கடல் சுங்கத் தீர் வையைச் செலுத்தாமல் திருட்டுத்தனமாகச் சாமான்களைக் கொண்டுவந்து விற்றார். அரசாங்கத்தார் இதையறிந்து அவ ரைச் சட்டப்படி கோர்ட்டில் விசாரித்துத் தண்டிக்க நட வடிக்கை எடுத்துக் கொண்டார்கள். அந்த வியாபாரி காந்தி யிடம் சென்று கண்ணீர்விட்டுத் தம் கஷ்டத்தைச் சொல்லித்

தம்மைக் காப்பாற்றும்படி வேண்டினர். அதற்குக் காந்தி, “நீ தப்பவேண்டுமானால் அதிகாரிகளிடம் ஒன்றையும் மறைக்காமல் சொல்லிவிடு!” என்று புத்திமதி கூறினர். இதற்கு வியாபாரி முதலில் சம்மதிக்காவிடினும், கடைசியாக வேறு நல்ல வழியில்லையென்றெண்ணி அதிகாரிகளிடம் உண்மையைச் சொன்னர். காந்தியும், குற்றத்தை ஒப்புக்கொண்ட வியாபாரியின் சார்பாக அதிகாரிகளிடம் பேசினர். அவர் திருட்டுத்தனமாகக் கொண்டுவந்த சாமான்களின் விலையைப்போல இரட்டிப்புத் தொகையைச் செலுத்தினல் வியாபாரியை விட்டுவிடுவதாக அதிகாரிகள் சொன்னர்கள். வியாபாரியும் அதற்கிசைந்தார்.

தென்னுப்பிரிக்க சத்யாக்ரகம்

1906-ஆம் வருஷத்தில் தென்னுப்பிரிக்க அரசாங்கத்தார் இந்தியர்களின் மரியாதைக்குக் குறைவு உண்டாக்கும் ஒரு சட்டத்தை உண்டுபண்ணினுர்கள். அச் சட்டப்படி தென்னுப்பிரிக்காவில் உள்ள இந்தியன் ஒவ்வொருவனும் தன்பெயரைப் பதிவுசெய்துகொண்டு கட்டை விரல் குறியையும் போடவேண்டும் என்று உத்தரவிட்டார்கள். இச் சட்டத்தை நீக்கக் காந்தி தீவிரமாக உழைத்தார்; சத்யாக்ரகப்போரைத் தொடங்கினுர். காந்தியும் மற்றவர்களோடு சிறைக்குச் சென்ருர். சிறையில் பல கஷ்டங்களை யனுபவித்தபோதிலும், ஒரு தர்ம காரியத்தை யுத்தேசித்துச் சிறை சென்றதால், கஷ்டங்களை யெல்லாம் அனைவரும் உற்சாகத்துடன் பொறுத்துக் கொண்டார்கள். பிறகு காந்திக்கும் தென்னுப்பிரிக்க அரசாங்கத்தாருக்கும் சமரசம் உண்டாயது.

காந்தியும் அவருடைய நண்பர்களும் சிறைமீண்டனர். அந்தச் சமரசத்தை விரும்பாத பட்டாணியொருவர் காந்தியைத் தடிகொண்டு மண்டையில் ஓங்கி அடித்துவிட்டார். காந்தி கீழே விழுந்து மூர்ச்சையானுர். பட்டாணியும் அவர் சகாக்களும் காந்தியை மறுபடியும் நையப் புடைத்தனர். உடனே போலீஸார் வந்து பட்டாணியையும் அவர் தோழர்களையும் கைது செய்தனர். காந்தியின் நண்பரான ஆங்கிலப் பாதிரியார் ஒருவர் காந்தியைத் தம் வீட்டிற்கழைத்துச் சென்றனர்; அவரும் அவருடைய மனைவியும் காந்திக்குச் சிகிச்சை செய்தனர்.

T3:251 (நG) 31H1

பட்டாணியின்மீது வழக்குத் தொடர்ந்து அவனைச் சிறைச்சாலைக்கு அனுப்ப, காந்தி விரும்பவில்லை. காந்தி தம் அபிப்பிராயத்தை அதிகாரிகளுக்குத் தெரிவித்தனர்.

அதற்கு அதிகாரிகள் "குற்றம் செய்தவனைத் தண்டிப்பது அரசாங்கத்தின் கடமை" யென்று சொன்னார்கள். காந்தி இது சம்பந்தமாக விடுத்த ஓர் அறிக்கையில், "என் ஆங்கில நண்பரும் அவர் மனைவியும் என்னை அன்பாயும் ஆதரவோடும் பாதுகாத்து வருகின்றனர். வெகு சீக்கிரத்தில் என் காயங்கள் ஆறி, நான் சுகமடைந்து பொது வாழ்க்கையில் எனது பொறுப்பை மறுபடியும் ஏற்றுக்கொள்வேனென்று எண்ணுகிறேன். பட்டாணியிடமாவது அவர் நண்பர்களிடமாவது ஒருவரும் கோபங் கொள்ளலாகாது. பட்டாணியும் அவர் நண்பர்களும் நான் அர

சாங்கத்தாருடன் செய்துகொண்ட சமரசம் தவறு என்று எண்ணினர்கள். அதற்காக என்னை அவர்கள் தங்களுக்குத் தோன்றிய வழியில் தண்டிக்க விரும்பினர்கள். அவர்களின் நடத்தைக்காக ஒருவரும் அவர்களைத் தொந்தரவு செய்யக்கூடாது என்பது என் கோரிக்கை. என்னைத் தாக்கியவர் முஸ்லீமாதலால், அவர்மீது என் ஹிந்து சகோதரர்கள் கோபங்கொள்வது சகஜம். என் ஹிந்து சகோதரர்கள் அம்மாதிரி ஒன்றும் செய்யமாட்டார்களென்று நம்புகிறேன். ஹிந்துக்களும் முஸ்லீம்களும் என்றும் இணைபிரியா நண்பர்கள்போல் வாழவேண்டும்" என்று எழுதியிருக்கிருர்.

இந்தியர்களின் கோரிக்கைகளை அரசாங்கத்தார் சரிவர நிறைவேற்ருமையால், காந்தி சுகமடைந்ததும் மறுபடியும் இந்தியர்கள் பலருடன் சிறைக்குச் சென்ருர். சிறையினின்றும் வெளிவந்ததும் காந்தியும் அவர் சகாக்களும் டால்ஸ்டாய் விவசாயப் பண்ணையில் வசித்தனர். இப்பண்ணையில் யாவரும் எளிய வாழ்க்கையை நடத்திவந்தனர். பண்ணை வேலைகளையெல்லாம் பண்ணை வாசிகள் தாமே செய்தனர். ஆயிரம் ஏக்கர் விஸ்தீரணமுள்ள பண்ணையில் ஒரே ஒரு கூலியாள்கூட இல்லையென்ருல், ஆச்சரியமில்லையா ? ஆயிரக்கணக்கான பழமரங்களும், தேவையான ஜல வசதியும், நல்ல நீர் ஊற்றும் இந்தப் பண்ணையில் இருந்தன. ஆண்களுக்கென்றும் பெண்களுக்கென்றும் இரண்டு விடுதிகளைத் தனித்தனியாக, காந்தி அமைத்தார். இங்கே ஒரு தச்சுப் பட்டரையும் ஒரு பள்ளிக்கூடமும் இருந்தன. பண்ணை வாசிகளுக்கு வேண்டிய சகல உணவுப் பொருள்களும், காய்கறி, பழம் முதலியனவும் பண்ணையிலேயே உண்டாயின. மாவு அரைத்து ரொட்டியையும்

பண்ணையிலேயே செய்துகொண்டனர். எல்லாரும் செருப்புத் தைக்கவும் தச்சுவேலை செய்யவும் கற்றுக்கொண்டார்கள். அவ்விதம் காந்தி அநேகம் செருப்புகளைத் தைத்துத் தமது பல நண்பர்களுக்குக் கொடுத்திருக்கிறார். காந்தி செய்த எல்லா வேலைகளிலும் பண்ணையில் வசித்த ஆண்களும் பெண்களும் மனப்பூர்வமாக ஒத்துழைத்தனர்.

தென்னாப்பிரிக்காவில் இந்தியர்களின் உரிமைக்காகப் போராடியதில் காந்தி பல தடவை சிறைக்குச் செல்ல நேரிட்டது. கடைசியாக, கோபால கிருஷ்ண கோகலே, அக்காலத்தில் ராஜப் பிரதிநிதியா யிருந்த ஹார்டிஞ்சு பிரபு இவர்களின் முயற்சியால் இப் போராட்டம் அப்போதைக்கு ஒருவாறு சமரசமாக முடிந்தது.

இடது பக்கம் முதலில் நிற்பவர் வள்ளியம்மை

தென்னாப்பிரிக்காவில் இந்தியர்களின் உரிமைக்காக காந்தி போராடிய போது, தமிழ் மக்கள், ஆண்களும் பெண்களும் காந்திக்குக் கொடுத்த ஆதரவு ஏராளமாகும். இவ்வாறு காந்தியின் பேரன்பைக் கொள்ளைகொண்டவர்களுள் வள்ளியம்மை என்ற தமிழ் மாது ஒருத்தி. அவள் தஞ்சை ஜில்லாவைச் சேர்ந்தவள். காந்தியின்

சத்யாக்ரகப் போரில் சேர்ந்து அவள் சிறை சென்ருள். சிறையிலேயே அவளை ஒரு கொடிய நோய் பற்றிக்கொண்டது. பதினறு வயதுகூட நிரம்பாத இத்தமிழ்ச் செல்வியின் மன உறுதி கண்டு மஹாத்மாகூட ஆச்சரியப்பட்டார். அவளது வீரத்தைப்பற்றி காந்தி பல மேடைகளிலும், வியாசங்களிலும் சிறப்பாகப் புகழ்ந்திருக்கிருர். அவள் சிறையிலிருந்து வந்தபின் அவளை காந்தி பார்க்கப்போன போது அவள் படுத்த படுக்கையாய்க் கிடந்தாள்.

காந்தி மனமுருகிவிட்டார். "அம்மா வள்ளியம்மே! நீ சிறை சென்றதற்காக வருத்தப் படுகிருயோ ஒரு வேளை?" என்று கேட்டார்.

வள்ளியம்மை: "மகாத்மாஜி! எனக்கு வருத்தம் சிறிதும் இல்லை. இன்னும் எவ்வளவு தடவை வேண்டுமானலும் நான் சிறை செல்லத் தயார்."

காந்தி: "அம்மா! உன் மன உறுதியை மெச்சினேன். ஆனல் சிறையில் வசிப்பதனல் ஏற்படும் துன்பத்தினலும் நோயினலும் இறக்க நேர்ந்தால் என்ன செய்வது?"

அதற்கு வள்ளியம்மை முகமலர்ச்சியுடன், "என் அண்ணலே! தாய் நாட்டின் பெருமையையும் நலத்தையும் கருதி உயிர்விடக் கொடுத்துவைக்க வேண்டாவா?" என்ருளாம்! இது நடந்த சில நாட்களுக்குப் பின் வள்ளியம்மை காலமானள்.

காந்தி தென்னப்பிரிக்காவி லிருந்து இந்தியாவுக்குத் திரும்பியபோது, தஞ்சை ஜில்லாவில், வள்ளியம்மையின் கிராமத்திற்குச் சென்று அவளது வீட்டைத் தரிசித்து வந்தார்.

இந்த வள்ளியம்மையைப் போலவே, வேறு இருதமிழ் இளைஞர்களான நாகப்பனும், நாராயணசாமியும் காந்தி

யுடன் தென்னுப்பிரிக்காவில் சிறை சென்று, உயிரையும் நீத்தார்கள்.

இம் மூன்று தமிழ் இளஞ் சிங்கங்களின் தைரியத்தையும் தியாக புத்தியையும் கண்ட காந்திக்குத் தமிழரிடத்து இன்னும் அதிகமான அன்பும் மரியாதையும் ஏற்பட்டது. அவர்களுடன் நன்ருகக் கலந்து தாமும் ஒரு தமிழனுக விளங்க வேண்டுமென்று அவர் ஆசை கொண்டார். அதனுல் தமிழ் எழுத்தை வாசிக்கவும் எழுதவும் கற்றுக் கொண்டார். என்ருலும், வேறு எத்தனையோ கடமைகளைப் புரிந்துவந்தமையால், தமிழ் மொழியை நன்ருகப் பயின்று கொள்ள அவருக்கு முடியவில்லை. "தமிழை என்னுல் நன்ருய்க் கற்க முடியவில்லையே!" என்று சில சமயம் வருத்தப்பட்டிருக்கிருர். காந்திக்குத் தமிழரிடமும் தமிழிடமும் இவ்வளவு பிரியம் ஏற்பட்டதற்குக் காரணம், இந்த மூன்று வீரத் தமிழர்கள்தான்.

8-NOV 1949
MADRAS



காந்திஜீ

ஸ்ரீமதி கஸ்தூரிபாய்　　ஸ்ரீமதி நாயுடு

டாக்டர் பி. கே. நாயுடு　　நாயுடுவின் பெண்

சபர்மதி ஆசிரமம்

தென்னுப்பிரிக்காவில் இருபத்தாறு வருஷம் தொண்டாற்றிய பிறகு, 1914-ஆம் வருஷம் காந்தி இந்தியாவுக்குத் திரும்பி வந்தார்; தம் குருவான கோகலேயை இங்கே சந்தித்தார். கோகலே எப்படிச் சொல்லுகிருரோ அவ்விதமே தம் வாழ்நாளைத் தேச சேவையில் கழிக்க காந்தி தீர்மானித்தார். கோகலே இதைக்கேட்டு அதிக

மகிழ்ச்சி யடைந்து, தாம் ஸ்தாபித்த இந்திய ஊழியர் சங்கத்தில் காந்தி சேர்ந்துகொள்ள வேண்டுமென்று விரும்பினர்; ஆயினும், சங்கத்தின் அரசியல் கொள்கை, நடைமுறை முதலியவை காந்தியின் கொள்கைகளுக்கு மாறுபட்டிருந்தமையால், காந்தி இந்திய ஊழியர் சங்கத்தில் சேராமலே தேசத்திற் குழைப்பதுதான் நலம் என்று

நினைத்தார். எனினும், கோகலேக்கும் காந்திக்கும் ஒரு விதமான மனவருத்தமும் இதனுல் ஏற்படவில்லை ; முன் போலவே எப்போதும் கோகலேயைத் தம் அரசியல் குரு வென்றே காந்தி கருதிவந்தார். ஒரு வருஷம் தேசத்தைச் சுற்றிப் பார்த்து, நிலைமையை நன்ருய் ஆராய்ந்து, விஷயங்களை நேரில் அறிந்து, அதன் பின்னர்தான் காந்தி பேசவோ எழுதவோ வேண்டுமென்று கோகலே சொன்னுர்.

அவ்விதமே காந்தி ஒருவருஷ காலம் ஊருராய்ச் சென்று தேசம் முழுதும் சுற்றிப் பார்த்தார். இப்படிச் சுற்றுப் பிரயாணம் செய்கையில், கவி தாகூரின் சாந்தி



நிகேதனுக்குப் போய்ச் சேர்ந்தார். அங்கே தாகூர் தேசத்தின் மறுமலர்ச்சிக்காகச் செய்துவந்த அரிய சேவையைக் கண்டு காந்தி மன மகிழ்ந்தார். என்ருலும், மாணவர்கள் அவரவர் வேலையை அவரவரே செய்து கொள்ளாமையைப்பற்றி வருத்தப்பட்டார். மாணவர்களும் உபாத்தி

யாயர்களும் சேர்ந்து தாங்களே சமையல் செய்துகொள்ள வேண்டுமென்று சொன்னர். கவி தாகூர் உள்பட யாவரும் காந்தியின் யோசனையை ஆதரித்தார்கள். அதன்மேல் இந்த வேலையை யாவரும் உற்சாகத்துடன் செய்யத் தொடங்கினர்.

இதன் நடுவில் தேசத் தொண்டுசெய்ய காந்திக்குப் பல சந்தர்ப்பங்கள் கிடைத்தன. அந்த வருஷத்தில் ஹரித்வாரத்தில் கும்பமேளா வந்தது. அங்கே வரும் யாத்ரிகர்களுக்குத் தொண்டு செய்வதற்காக, காந்தி தம் கோஷ்டியாருடன் ஹரித்வாரம் சென்ருர். ஹரித்வாரத்தில் காந்தியும் அவர் கோஷ்டியினரும் தோட்டிவேலை செய்து அசுத்தங்களை யெல்லாம் அப்போதைக் கப்போது அப்புறப்படுத்தி, யாத்ரிகர்களுக்குச் சுகாதாரத்தைத் தேடிக் கொடுத்தார்கள். தோட்டிவேலை ஒரு கௌரவமான வேலையென்றும், அந்த வேலையைச் செய்வதனுல் ஒரு மேல்ஜாதி ஹிந்துவோ அல்லது படித்தவரோ அந்தஸ்தில் தாழ்ந்து விடமாட்டார் என்றும் நிரூபித்துக் காட்டினுர்.

ஒரு வருஷம் கழிந்த பின்னர், தென்னுப்பிரிக்காவில் செய்தது போலவே இந்தியாவிலும் ஓர் ஆசிரமத்தை ஏற்படுத்த வேண்டுமென்று காந்திக்கு எண்ணமிருந்தது. ஆகவே, 1915-ஆம் வருஷத்தில், ஆமதாபாதில், சபர்மதிக் கரையில், ஒரு சத்யாக்ரஹ ஆசிரமத்தை அமைத்தார். இந்த ஆசிரம வாசிகள், எளிய வாழ்க்கை நடத்தி, தன்னலங் கருதாமல் உழைக்கவேண்டும். ஆசிரமத்திற் சேர விரும்பும் ஒருவன் பல விரதங்களை அனுசரிக்க வேண்டும். தேசத்துக்குத் தொண்டு செய்யவேண்டுமென்ற ஒரே எண்ண முள்ளவர்கள்தான் இந்த ஆசிரமத்தில் சேர முடியும்.

முதன்முதலில், உண்மையே பேசுவது என்ற விரதத்தை அனுசரிக்கவேண்டும். எவ்விதமான கஷ்டங்கள் ஏற்பட்டபோதிலும் பொய் சொல்லக்கூடாது என்பது மாத்திரமன்று, தன்னுடைய தேசத்தின் நலத்திற்காகவுங்கூட எவ்விதமான பொய்யையும் சொல்லக்கூடாது. ஒளி மறைவாக, அல்லது மோசடியாக ஒரு வேலையையும் செய்யக் கூடாது. எப்போதும் சத்தியத்தைக் கடைப்பிடித்தே நடக்கவேண்டும். அப்படிச் செய்வதால், தன் நண்பர்களையும், தன் மதிப்புக்குரிய பெரியோர்களையும் எதிர்க்க நேரிட்டாலும்கூட அதைப் பொருட்படுத்தக் கூடாது.

அஹிம்சை விரதம் மற்றொன்று. இந்த விரதத்தைப் பூண்டவர் கொல்லாமை விரதத்தை யனுசரிக்கவேண்டும். நியாயந் தவறி நடப்பவர்களிடங்கூடக் கடினமான வார்த்தைகளைச் சொல்லி அவர்கள் மனதைப் புண் படுத்தக் கூடாது. தனக்குத் தீங்கிழைக்க முயலுவோரிடத்தும் விரோதம் பாராட்டாமல் அவர்களிடம் அன்புடனே நடந்து கொள்ளவேண்டும். ஒருவன் தனக்குத் தீங்கிழைத்தால், அதற்குப் பதில் அவனுக்குத் தீங்கிழைக்கவுங் கூடாது. அவன் எக்காரணத்தினல் தீங்கிழைத்தானே அக்காரணத்தைத் தான் களையவேண்டும். ஒவ்வொருவரையும் அன்பினலேயே வெல்லவேண்டும். அவ்விதம் தன்விரோதியிடம் அன்பு செலுத்துவதால் உயிர்போக நேரிடினும், அதற்குப் பயப்படக்கூடாது.

பிரம்மசரிய விரதம் மூன்ருவது. பெண்களைத் தன் சகோதரிகளைப் போலவும் தாயாரைப் போலவும் பாவிக்க வேண்டும். காம எண்ணத்துடன் பெண்களைப் பார்க்கக் கூடாது. தனக்குக் கலியாணமாகி யிருந்தால் தன் மனைவியைத் தன் வாழ்க்கைத் துணைவியென்று கருதி அவளிடத்து

மிகவும் பரிசுத்தமான எண்ணத்துடன் நடந்துகொள்ள வேண்டும். நாம் இவ்வுலகில் பிறந்ததன் கருத்து நன்ருகச் சாப்பிடுவதற்கென்று எண்ணக் கூடாது. ஆரோக்ய மான வாழ்வுக்கு எவ்வளவு உணவு வேண்டுமோ அதை மாத்திரம் சாப்பிடவேண்டும். நாக்குக்கு இடம் கொடுத்து, நல்ல கரிப்பும் காரமும் தித்திப்புமான பண்டங்களையோ, விலக்கான பிற ஆகாரங்களையோ சாப்பிடக்கூடாது. மித மிஞ்சிய உணவு உண்ணலாகாது. கொதிப்பையும் ஆவேசத்தையும் உண்டாக்கும் ஆகாரத்தையும் ஒழிக்கவேண்டும்.

திருடாமலிருப்பது மற்ருெரு விரதம். இதன் கருத்தென்னவென்ருல், பிறர் பொருளைத் திருடக்கூடாது என்பது மாத்திரமன்று ; உண்மையாகத் தனக்கு அவசியமில்லாத பொருள்களையோ, தேவைக் கதிகமான பொருள்களையோ என்றும் வைத்திருத்தலாகாது.

ஒருவன் எவ்வித ஆஸ்தியும் வைத்துக்கொள்ளக் கூடாது என்பது மற்ருெரு விரதம். இதற்கு ஒருவன் அதிகமான ஆஸ்தியை வைத்துக்கொள்ளக் கூடாதென்பதன்று அர்த்தம் ; தன் தேக சௌக்யத்திற்கு வேண்டாத எந்தப் பொருளையும் வைத்துக்கொள்ளக் கூடாதென்பதுதான் கருத்து.

இந்த விரதங்களுடன், சுதேசி விரதத்தையும் ஆசிரம வாசிகள் கைக்கொள்ளவேண்டும். எப்போதும் தைரியத்தைக் கைவிடக்கூடாது. பயம் என்பதைக் கனவிலும் நினைக்கக்கூடாது. காந்தியின் ஆசிரமவாசிகளுக்கு அரசர்களின் பயமும், ஜனங்களுடைய பயமும், ஜாதிக் கட்டுப்பாட்டின் பயமும், குடும்பத்தின் பயமும், திருடர்களின் பயமும், துஷ்ட மிருகங்களின் பயமும், நீரின் பயமும், நெருப்பின் பயமும், மரணத்தின் பயமும் கிடையா.

சுதேசி விரதத்தைக் கைக்கொண்டவர்கள் எப்போதும் ஆடம்பரமற்றதும், இந்தியாவிலேயே நெய்யப்பட்டதுமான கதராடையே உடுத்தவேண்டும். மற்றும் இந்தியாவில் செய்த சாமான்களேயே உபயோகிக்க வேண்டும்.



மக்களின் கஷ்டங்களை எவ்விதம் ஒழிப்பது என்ற இரகசியத்தை காந்தி தென்னுப்பிரிக்காவில் அனுபவத்தில் அறிந்தார். பீஹார் மாகாணத்தில் சாம்பரானில் பெரிய பெரிய அவுரித் தோட்டங்க ளுண்டு. ஒரு தோட்டத்தில் நூற்றுக் கணக்கான தொழிலாளர்கள் வேலைசெய்து வந்தனர். அந்தத் தொழிலாளரைத் தோட்ட முதலாளிகள் சரியாக நடத்தவில்லை. இதைக் கேள்விப்பட்ட காந்தி இதன் உண்மையை நேரில் கண்டறிவதற்காக, அங்கே சென்றார். ஊரூராய்ச் சுற்றித் தொழிலாளர்களின் பரிதாபகரமான நிலைமையைக் கண்ணாரக் கண்டார். அவர்களின் குறைகளை நீக்கப் பலநாள் உழைத்தார். அவர்க

ளுடைய குறையும் ஒருவாறு தீர்ந்தது. பின்னுல் கெய்ரா ஜில்லாவில் மழையில்லாமல் பஞ்சம் உண்டாயிற்று. குடியானவர்கள் வரி செலுத்த முடியாமல் தவித்தனர். காந்தி உடனே கெய்ராவுக்குச் சென்று குடிகளுக்கு வேண்டிய உதவியைப் புரிந்தார். ஆமதாபாதில் தொழிலாளர்களுக்கும் ஆலை முதலாளிகளுக்கும் சச்சரவு ஏற்பட்டகாலத்தில், காந்தி ஆலை முதலாளிகளைக் கண்டு தொழிலாளர்களின் குறைகளைத் தீர்த்தார். இவ்விதமாக காந்தி தம்மால் இயன்றவரை, நாட்டின் ஏழை மக்களுக்கு உழைத்து உதவி புரிந்து வந்திருக்கிருர்.



காந்தியும் சாரணர்களும்

நம் வாலிபர்களெல்லாம் ஒழுக்க முடையவர்களாகவும், சமூகத் தொண்டில் என்றும் மாருத பற்றுள்ளவர்களாகவும், ஆரோக்ய முள்ளவர்களாகவும், பலமுள்ளவர்களாகவும் இருக்க வேண்டுமென்று காந்திக்கு ஆசை உண்டு. அவர்களுக்கென்று ஏற்பட்டுள்ள தேசீய இயக்கமான ஹிந்துஸ்தானச் சாரணச் சங்கத்துச் சாரணர்களை காந்தி இரண்டு வருஷங்களுக்கு முன்பு வார்தாவில் சந்தித்தார். அச் சாரணர்கள் கூட்டத்தில் ஹிந்துக்கள், முஸ்லீம்கள் கிறிஸ்தவர்கள் எல்லாரும் கலந்திருந்தனர். இதைக்காண காந்திமனமகிழ்ந்தார். தேசத்தில் உள்ள சிறுவர்களெல்லாம் ஒற்றுமையாய் ஜாதிமத வித்தியாச மில்லாமல் உழைக்க வேண்டுமென்பது ஹிந்துஸ்தான் சாரணச் சங்கத்தின் நோக்கம் இதை யறிந்து காந்தி, சாரணர்களை அந்த லக்ஷியத்தைக் காப்பாற்றும்படி சொன்னார். தேசத்தில் இப்போது வேண்டியது, எல்லா மக்க



ளிடத்தும் ஒற்றுமையே. மற்றும், இச்சாரணர்கள் கவாத்துச் செய்வது, ஒழுங்காக ஆயிரம் பேர் சேர்ந்து நடப்பது, திரும்புவது, அணிகளாகப் பிரிவது, மறுபடியும் ஒன்று சேர்வது, இவற்றை யெல்லாம் காந்தி பார்த்தார்; வெகு சந்தோஷப்பட்டார். இவ்விதப் பயிற்சி, நாட்டில் எல்லா சிறுவர் சிறுமியருக்கும் கற்றுக்கொடுக்க வேண்டுமென்று காந்தி அபிப்பிராயப்பட்டார். இதனால் மக்களுக்கு ஒரு கட்டுப்பாடும் ஒழுக்கமும் ஒற்றுமையுமேற்படும் என்று காந்தி சொன்னார். இந்தப் படத்தில் காந்தி அச்சாரணர்களின் கொடியை ஏற்றுகிறார். அவரைச் சுற்றிச் சாரணர்கள் பலரிருப்பதைப் பாருங்கள்!



காந்தியும் அவரது உணவும்

காந்தி உணவு விஷயத்தில் பல பரிசோதனைகளைச் செய்திருக்கிருர். பல தடவைகளில் அநேக நாட்கள் பட்டினி கிடந்திருக்கிருர். பச்சைக் காய்கறிகள், கீரைகள், நிலக்கடலை, பழம், இவற்றையேதான் அவர் சாப்பிடுகிருர். ஆட்டுப் பாலைத்தான் சாப்பிட்டு வருகிருர். இவ்விதமாக உணவுப் பரிசோதனைகளுடன் தேசத்தின் நன்மைக்காகவும் இரவு பகலாய் உழைத்து வருகிருர். இதனுல் இவருக்கு உடம்பு அசௌக்ய மேற்பட்டு ஒன்றிரண்டு தடவைகளில் சத்திர சிகிச்சையும் நடந்தது. இவருக்கு உடம்பு அசௌக்யம் என்ருல் சாதா



ரண வைத்தியர்கள் வைத்தியம் பார்ப்பது என்பது கிடையாது. இந்தியாவிலேயே பெயர் பெற்ற வைத்தியர்கள் வைத்தியம் செய்ய முந்துவார்கள். பம்பாயிலுள்ள டாக்டர் ஸ்ரீஜீவராஜ் மேதாவும், கல்கத்தாவிலுள்ள டாக்டர் பிதான் சந்திரராயும், டெல்லியிலிருந்த காலஞ் சென்ற தேசபக்தரும் பிரசித்தி பெற்ற முஸ்லீம் தலைவருமான டாக்டர் அன்சாரியும் காந்தியின் வைத்தியர்கள். படத்தில் காந்தி சிரித்துக்கொண்டிருக்கிறார். டாக்டர் அன்சாரியும் டாக்டர் பிதான் சந்திரராயும் சிந்தனையிலாழ்ந்திருக்கிறார்கள். காந்தி எப்போதும் குதூஹலமான தன்மையுடையவர். நோயால் வருந்தும் போதுங்கூட அவர் சந்தோஷமாயிருப்பார். அதை நாம் படத்தில் பார்க்கலாம்.



அரசியல் தொண்டு

1914-ஆம் வருஷத்தில் ஐரோப்பாவில் மஹா யுத்தம் நடந்தது. இந்திய ராஜப் பிரதிநிதி, நமது தேசத் தலைவர்கள் பலரை யழைத்தார்; சண்டையை வெற்றிகரமாக நடத்த என்ன செய்வது என்பதைப் பற்றி அவர்களுடன் ஆலோசித்தார். அப்போது காந்தியையும் ராஜப் பிரதிநிதி அழைத்தார், காந்திக்கு இந்தக் கூட்டத்தில் அவ்வளவு உற்சாக மில்லை. என்றாலும், பலர் கட்டாயபத்தின் பேரில், ராஜப் பிரதிநிதியிடம் அவர் சென்றார். இந்தியர்கள் பிரிட்டிஷ் ஏகாதிபத்யத்துக்குத் தங்களாலான உதவியை அந்த நெருக்கடியான சமயத்தில் செய்யவேண்டுமென்று அந்தக் கூட்டத்தில் தீர்மானித்தார்கள். சேனையிலே இந்தியர்கள் சேர்ந்துகொள்ள வேண்டுமென்று காந்தி ஹிந்தியில் ஒரு பிரசங்கம் செய்தார். இக்கூட்டம் கலைந்ததும், இந்தியாவின் அரசியல் சீர்திருத்தத்தைப் பற்றி ராஜப் பிரதிநிதிக்கு, காந்தி ஒரு கடிதம் எழுதினார். பிறகு, படை திரட்டும் பிரசாரத்தில் இறங்கி, ஊர் ஊராய்ச் சுற்றுப் பிரயாணம் செய்து சிப்பாய்களைச் சேர்த்தார். இந்த வேலை மிகவும் கடினமா யிருந்தது. பல சமயம் கால் நடையாகவே வெகுதூரம் காந்தி செல்லவேண்டி யிருந்தது. கையிலேயே உணவை எடுத்துக்கொண்டு சென்றார். இவ்வாறு அலைந்து திரிந்ததால், அவருக்கு உடம்பு அசௌக்ய மேற்பட்டது. பல மாதங்கள் படுத்திருந்தார்.

1919-ஆம் வருஷத்தில் தேசத்தின் விடுதலையின் பொருட்டு காந்தி உழைக்க ஆரம்பித்தார். அவருடன் லக்ஷக்கணக்கான தலைவர்களும் அவர் சொற்படி நடந்து

ஸ்ரீமதி கஸ்தூரிபாய் காந்தி

CONNEMARA PUBLIC LIBRARY
8-NOV 1949
MADRAS

சொல்லொணுக் கஷ்டங்களுக். கிடையில், இன்றைக்கும் உழைத்து வருகிருர்கள். இதன் பொருட்டு காந்தி பல தடவை சிறைக்குச் சென்றிருக்கிருர். அவருக்கு பயம் என்பது கொஞ்சமும் கிடையாது. தம்முடைய இருபது வருஷத் தொண்டினுல் நமது நாட்டிலேயே ஒரு மகத்தான மாறுதலேயும், ஜனங்களிடம் தைரியத்தையும் உண்டு பண்ணி யிருக்கிருர். ஆத்ம சக்தியையும், சத்யாக்ரஹத்தையும், சத்தியத்தையுமே காந்தி கைக்கொண்டு உழைத்து வருகிருர். காந்தியும் அவருடைய உண்மையான சிஷ்யர்களும் ஏதேனும் தப்புச் செய்தால், அதை உடனே ஒப்புக் கொள்வார்கள். தாம் செய்த குற்றத்திற்காகவும், தம் சிஷ்யர்கள் செய்த குற்றத்திற்காகவும் காந்தி அடிக்கடி பலநாட்கள் உபவாச மிருந்திருக்கிருர். ஒருதடவை, ஹிந்துக்களுக்கும் முஸ்லீம்களுக்கும் சண்டை நேரிட்டதைக் குறித்து இருபத்தாறு நாள் பட்டினி கிடந்தார். இதனுல் ஒரு நன்மை யேற்பட்டது. நாட்டில் ஹிந்து முஸ்லீம் ஒற்றுமையை எப்படி நிலேநாட்டுவதென்று அநேகம் ஹிந்து முஸ்லீம் தலேவர்கள் முயற்சி செய்தனர். பிரிட்டனின் பிரதம மந்திரியா யிருந்த ராம்ஸே மாக்டோனுல்டு இந்திய அரசியல் சம்பந்தமாக ஒரு ஏற்பாடு செய்தார். ஹரிஜனங்கள் தங்கள் சொந்தப் பிரதிநிதிகளேத் தாங்களே தனியாக ஓட்டுப்போட்டுத் தேர்ந்தெடுத்துச் சட்ட சபைகளுக்கு அனுப்பவேண்டும் என்று அவர் அதிலே கூறினுர். இதற்குத் தனித்தொகுதி முறை என்று பெயர். ஹரிஜனங்களுக்கு இப்படித் தனிதொகுதியை ஏற்படுத்தி அவர்களே ஹிந்து சமூகத்தினின்றும் அவர் பிரித்தார். இத்தீங்கை ஒழிப்பதற்காக, காந்தி ஓர் உபவாசமிருந்தார். அத்தீங்கை அரசாங்கத்தார் ஒழித்ததும் காந்தி தமது உபவாசத்தை முடித்தார்.

நிஜமாகவே, காந்தி எப்போதும் சமாதானத்தையே விரும்புகிறவர். கௌரவமான எந்த ஏற்பாட்டையும் அரசாங்கத்தார் செய்தால், அதை காந்தி எந்த சமயத்திலும் ஒப்புக்கொள்ளுவார். உதாரணமாக, ராஜப் பிரதிநிதி, இர்வின் பிரபு கௌரவமாக, காந்தி கோரிய சில ஏற்பாடுகளுக்கிணங்கிய போது, காந்தியும் தம் அரசியல் கிளர்ச்சியை

வட்டமேஜை மகாநாட்டில் காந்திஜி

நிறுத்தினர். இந்திய மக்களின் அரசியல் நோக்கங்களை பிரிட்டிஷ் மக்களுக்குத் தெரிவிக்க, காந்தி லண்டனில் கூடிய வட்ட மேஜை மஹா நாட்டிற்கும் சென்ருர். அரசியல் தொண்டுடன், மக்களின் நிலைமையை மேற்படுத்தக் கூடிய பல துறைகளிலும் காந்தி உழைத்து வருகிருர். ஹரிஜன முன்னேற்றத்திற்காக அவர் செய்துள்ள தொண்டு மகத்தானது. மடிந்துபோன கிராமக் கைத்தொழில்களையும் தலையெடுக்கச் செய்து வருகிருர். மக்களின் வறுமையை நீக்கக் கதர் இயக்கத்தை ஆரம்பித்து, நாடெங்கும் கதராடை வாங்கும்படி பிரசாரமும் செய்து வருகிருர்.

CONNEMARA PUBLIC LIBRARY
8-NOV 1949
MADRAS

ஏழைகளின்
துணைவரான
காந்தித்
தாத்தா

குணதிசயம்

குஜராத்தி பாஷையில் உள்ள ஒரு பாட்டின் பேரில் காந்திக்கு அதிக பிரியம். அந்தப் பாட்டை பிரதி தினமும் பாடுவார். அந்தப் பாட்டு அவருடைய வாழ்க்கையின் லக்ஷியத்தையும் போக்கையும் நன்கு காட்டுகிறது. அதுதான் 'வைஷ்ணவ ஜனதோ' வென்ற பாட்டு. அதன் கருத்து இதுதான். "எவனொருவன் பிறர் கஷ்டத்தை யறிந்து அதைத் தன்னுடையது என்று பாவிக்கிறானோ, அவன்தான் உண்மையான வைஷ்ணவன். அவன் பிறருக்குச் சேவை செய்வதில் முன் நிற்பான்; தன்னைப் பற்றிப் புகழ்ந்து கொள்ளமாட்டான்; எல்லாரையும் வணங்குவான்; ஒருவரையும் இகழ்ச்சியாகப் பேசான். அவன் மனமும் சொல்லும் செய்கையும் பரிசுத்தமானவை. பேராசை, மோசக் கருத்து, கோபம், இவையொன்றும் இல்லாதவனே உண்மையான வைஷ்ணவன்."

காந்தி கடவுள் பக்தர். தன்னலங் கருதாத, மாசு மறுவற்ற புனித வாழ்வு அவருடைய வாழ்வு. ஏழைகளிடத்தில் அவருக்கு அளவுகடந்த அன்பு. ஏழைகள் யாவரும் நன்றாகச் செழித்து வாழவேண்டு மென்பது அவருடைய ஆசை. இந்த ஒரு காரணத்தினால்தான் அவர் ஹரிஜனங்களுக்கும் கிராம ஜனங்களுக்கும் இணையற்ற சேவையைச் செய்து வருகிறார்.

குழந்தைகளிடம் அவருக்கு மிகவும் பிரியம். அவர்களிடையில் நிரம்ப சந்தோஷமா யிருப்பார்; குழந்தைக

ளோடு குழந்தையாய் நடந்துகொள்வார். இங்கிலாந்திலே நடந்த வட்டமேஜை மகாநாட்டுக்குச் சென்றிருந்தபோது மகாத்மா அங்கே ஏழைக் குழந்தைகளின் இருப்பிடமான 'நண்பர்கள் நிலய'த்தில் வசித்தார். அச்சமயத்தில்



அக்கம் பக்கத்துக் குழந்தைகளெல்லாம் வந்து காந்தியைச் சூழ்ந்துகொண்டு விளையாடும். காந்தி எல்லா ஜாதிக் குழந்தைகளிடத்தும் எல்லாத் தேசக் குழந்தைகளிடத்தும் ஒரே விதமான அன்புடையவர்.

காந்தி ஒரு அவதார புருஷர்; அவரை அறிஞர்கள் உலகத்தின் மிகப் பெரிய மகான்களுக்கும் மத ஸ்தாபகர்களுக்குமே ஒப்பிடுகிறார்கள். அவரைப் போன்ற உத்தமர்களைக் காண்பது அரிதாகும். அவர் காலத்தில் பிறந்து, அவரை நேரில் தரிசித்து, அவருடைய செயல்களை நேராகக் காணும் பாக்கியம் பெற்ற நாமெல்லாரும் புண்ணி

காந்தித் தாத்தாவும்

அவர் தற்போது வசிக்கும் குடிசையும்

யம் செய்தவர்கள். காந்தி நமக்கெல்லாம் சேவை புரிவதால், அவருக்கு நாம் மிகவும் கடமையும் பட்டிருக்கிறோம். நம்மாலியன்ற அளவு நாமும் காந்தியின் கொள்கைப்படி நடந்து, அவரது வேலையைச் சிறிதேனும் அவருக்கு எளிதாக்கவேண்டும். அதற்கு காந்தியின் வாழ்க்கையே நமக்கு வழிகாட்டி யாகும்.